ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

திருச்சிற்றம்பலம்

## முன்னுரை

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் கந்தவேளையே எந்த வேளையும் சிந்தித்துச் சாத்திர தோத்திரங்களாக 6666 பாடல்களைப் பாடியருளினார்கள். இவற்றை ஆறுமண்டலங்களாக வகுத்தார்கள். ***சிறு நூற்றிரட்டு என்பது நான்காவது மண்டலத்தைச் சார்ந்ததாகும். இத்திரட்டுள் ஞானவாக்கியம் இடம் பெறுகிறது.*** இதில் 110 ஞானவாக்கியங்கள் உள்ளன. சுவாமிகள் இவ்வாக்கியத்தின் முடிவில் ஒரு குறிப்பு வரைந்துள்ளார்கள். அதில், கூறுமாறு அறிவுநெறிக்குரிய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் விரிவில் அருளிச் செய்தவர்கள் அவை ஏெரிதும் சுருங்கிநின்று பெரும்பொருள் தருமாறு ஞான வாக்கியத்தை அருளியுள்ளார்கள். இவ்வரிய ஞானச் செல்வத்தை நமக்கருளிய நம் குருநாதருக்கு நம் அன்பையன்றி வேறு என்ன காணிக்கை செலுத்த முடியும்? இந்த ஞான வாக்கியங்கள் சுவாமிகள் நமக்களித்தருளும் உபதேசம் என்றே தோன்றுகின்றது. சுவாமிகள் நமக்குச் செறியறிவுறூஉ அளித்தருளினார்கள். அது உரைநடை உபதேசம். இது செய்யுள் வடிவிலமைந்த உபதேசம். எளியேன் அகவையில் முதியவனாயினும் அறிவிற்சிறியேன். இயன்ற அளவில் ஞானவாக்கியச் சுருக்கம் போல் சுருக்கமாக உரைவரைந்துள்ளேன். குறையிருப்பின் அது எளியேன்குறை. நிறை இருப்பின் அது சுவாமிகளுடையது. மெய்யன்பர்களே! இவ்வாக்கியம் உபதேசமாகலின் கற்றபின் நிற்க அதற்குத்தக, என்பதே எளியேன் விண்ணப்பம்.

அன்பன்
- ப. இராமன். (மார்ச். 2001)

குறிப்பு:- சுவாமிகள் அருளிய இந்த ஞானவாக்கியம், பலரும் புரிந்துக் கொள்ளும்படி பிரித்து எழுதப்பட்டதாகும்.

## நூல்

அறிவுக்கு அறிவு இறைசற் சொரூபம். 1.

உயிரான அறிவுக்கு அறிவாய் இருந்து அதற்கு எல்லாவற்றையும் அறிவிப்பது இறைவனதுஅறிவின் இயல்பு

ஆனந்தப் பொருள்தான் அந்தப் பரன் 2.

அந்தப் பரம்பொருள் பேரின்ப வடிவமானதாகும்.

இறப்பொடு பிறப்புஅறு சிறப்புளன் அவனே. 3.

அவன் இறப்பொடு பிறப்பும் இல்லாத பெருமையன்.

ஈன்றோர் எவரையும் ஈன்றோன் இறையே. 4.

படைக்கின்றவர் எவரையும் படைப்போன் இறைவனே.

உதிப்பன தந்து அளித்து ஒடுக்குவது இறை அருள். 5.

எல்லாவற்றையும் படைத்துக்காத்து அழிப்பது இறைவனது அருளாகும்.

ஊறு அறு முத்தொழில் மாறுஉயிர் பொருட்டே. 6.

இறைவன் முத்தொழில்களைச் செய்வது மலங்களால் மயங்கும் உயிரை விடுதலை செய்தற்பொருட்டேயாம்.

எழுவகைத் தோற்றமும் அழிதல் நிச்சயமே. 7.

எழுவகையான பிறப்புக்களும் அழிதல் உறுதியாகும்.

ஏறு கன்மங்கள் காறு அறு பிறவி. 8.

வளரும் வினைகள் அளவற்ற பிறப்புக்களை உண்டாக்கும்.

ஐம்புல நுகர்ச்சியில் பம்பும் அக்கன்மம். 9.

ஐம்புலன்களின் மூலம் போகங்களை அனுபவிப்பதால் அவ்வினைகள் வளரும்.

ஒட்டு இருவினைச் சமம் கட்டு அவிழ் பருவம். 10.

உயிரைச் சேர்ந்துள்ள இருவினையும் சமம் ஆதலே ஆணவமலம் விலகும் பருவமாகும்.

ஓதலும் உணர்தலும் வேத ஆகம அந்தம். 11.

கற்பதற்கும் அறிவதற்கும் உரியவை வேதாந்தமும் ஆகமாந்தமுமேயாகும்.

ஔடத சித்தி விவச நெறிக்கு இல். 12.

மருந்து முதலிய சித்துக்கள் துறவறத்திற்கு இல்லை.

அஃகல் இலாதார் தர்க்கம் இடாரே 13.

அறிவுக்குறை இல்லாத அறிஞர் வாதமிடார்.

கருளும் பகலும் அருள்நிலை இல்லை. 14.

இரவும் பகலும் உள்ளது அருள் நிலை இல்லை.

ஙகரம் போல்வார் புகர்இல் குரவர். 15.

குற்றமில்லாத ஞானாசிரியர் ஙகர எழுத்து போல் எல்லோரையும் தழுவிக் கொள்வர்.

சடநிழல் போல்வார் இடர்தபு சீடர். 16.

குருவின் துன்பம் நீக்கும் சீடர் அவரின் உடம்பின் நிழல் போன்றவர்.

ஞண்டுச் சூல்போல் ஒண்தொடி விழைவு. 17.

தாய் நண்டின் உடம்பு வெடித்தே குஞ்சுககள பிறப்பதால் தாய் நண்டு இறந்துவிடும். அதுபோல் மாதர் விருப்பம் அவரை விரும்பியவரைக் கொல்லும்.

இடம் பொருள் ஏவல் திடம் பரநிலை இல். 18.

வசிக்குமிடம், நுகர்பொருள், வேலையாட்கள் பெறுதல் உறுதியான துறவறம் இல்லை.

இணக்கிக் கொண்டால் பிணக்கு ஒன்றும் இலை. 19.

மனத்தை வயப்படுத்தினால் பின் முத்திக்குத் தடை இல்லை.

தலமும் தீர்த்தமும் மலம் அடுநிலையே. 20.

தலதரிசனமும் தீர்த்தமாடலும் மும்மலம் போக்கும் நிலையாகும்.

நற்காலம் தான் மெய்த்தே நினை நிலை. 21.

மெய்யான கடவுளை நினைக்கும் நிலையே நல்ல காலம்.

பத்திமையர்க்கும் முத்தி கிடைக்கும். 22.

இறைவன்பால் அன்புடையார்க்கும் முத்தி கிடைக்கும்.

மந்திரம் எந்திரம் அந்தர நெறிக்கு இல். 23.

மந்திரசெபமும் இயந்திர பூசையும் நிட்டை நெறிக்கு இல்லை.

யமிநெறி வேட்போர் நிமிர் பிழை ஈட்டார். 24.

முனிவர் மார்க்கம் விரும்புவோர் பெரும்பிழை செய்யார்.

இரப்பு அருள் நிலையில் முரண் பவம் ஒழியும். 25.

இறைவனிடம் யாசிக்கும் அருள் நிலையில் பகையான பிறப்பு ஒழியும்.

இலம்பாடு உறினும் கலங்கார் விவேகர். 26.

வறுமைவரினும் அறிவுடையார் கலங்கமாட்டார்.

வயங்கு அருள் உள்ளார் இயங்கு உயிர் கொல்லார். 27.

விளங்கும் அருளுடையவர் வாழும் உயிர்களைக் கொல்லமாட்டார்.

அழகு அணி விருப்பம் இழிவு இறந்தார்க்கு இல். 28.

கீழ்நிலையைக் கடந்தவர்க்கு அழகினும் அணியிலும் விருப்பம் இல்லை.

இளமை விவேகி பின் தளர்வறும் யோகியே. 29.

இளமையில் பொய் எது எது எனப் பகுத்தறிவோர் பிற்காலத்தில் திடமான யோகியாவார்.

அறங்கள் இரண்டும் திறம்பாதார்க்கே. 30.

இல்லறம் துறவறம் இரண்டும் அவற்றை நெறி தவறாமல் கொள்வார்க்குரியவை.

அனந்தல் குறைந்தால் மனம் செலும் மேலே. 31.

தூக்கம் குறைந்தால் மனம் சத்துவகுணத்திற் செல்லும்.

கண்டப் பொருள் அறிகண் துப்பு இலதே. 32.

உருவப் பொருள்களை அறியும் கண் அறிவிலாச் சடம்

காணாப் பொருளைக் காண்கண் மெய்க்கண். 33.

தூலக்கண்காணாப் பொருளைக் காணும்கண் ஞானக்கண்.

கிரியையும் சரியையும் திரிதரல் கெடுமுன். 34.

சரியை, கிரியை, யோகம், ஞரூனம் என்னும் நான்கு நெறிகளில் சரியை கிரியை செய்தல் முதலில் அமையும்.

கீழ்மை இல் ஞானம் தாழ்வு இல் அருளே. 35.

குறைவில்லா ஞானமே குறைவில்லாத அருளாகும்.

குருஅருள் இன்றி அருள் வரல் இன்றே. 36.

குருவின் அருள் இல்லாமல் இறை அருள் வருவதில்லை.

கூட்டம் நீங்கல் வாட்டம் இல் நெறியே. 37.

கூட்டத்திலிருந்து விலகுதல் வருத்தம் வராதவழியாகும்.

கெடுதியாவது வடுவு உடை இச்சை. 38.

குற்றமுள்ள ஆசையே கேடு எனப்படும்.

கேவல நெறியே பாவம் இலா நெறி. 39.

தனிமை வழியே பாவம் இல்லா வழியாகும்.

கையரும் அறியின் மெய்ந்நிலை ஏய்வர். 40.

சண்டாளரும் உண்மை உணரின் உண்மைநிலை அடைவர்.

கொல்லுவர் வல்லார் குரோத ஆதிகளை. 41.

வல்லவர் சினம் முதலியவற்றைக் கொல்வர்.

கோட்டை ஆவது மாட்சிமை மோனம். 42.

சிறந்த மௌனமே ஒருவனுக்கு அரண் ஆகும்.

சகமே மறையும் அகம் முகம் அழுந்தின். 43.

மனம் அடங்கினால் உலகமே மறைந்துவிடும்.

சாதி பேதத் தளை மாதுறவுக்கு இலை. 44.

பெருந்துறவு கொள்ளச் சாதி வேற்றுமை என்ற வரம்பு இல்லை.

சித்தி விரும்பார் முத்தி வரம்போர். 45.

முத்திபெறும் குறிக்கோளுடையார் சித்துக்களை விரும்பார்.

சீவன் உடல்போல் தேவனும் உயிரும். 46.

உயிரும் உடம்பும்போல் இறைவனும் உயிருமாகும்.

சுக வழிபாடு பகிர்முகம் அன்று. 47.

முத்திக்குரிய வழிபாடு புறப் பூசையால் அன்று.

சூக்கத்தினும் அதி சூக்கம் அறிவு. 48.

நுண்மையினும் அதிக நுண்மையானது அறிவு.

செயற்கை தணந்தோர் இயற்கை அறிவார். 49.

உலகச்செய்கை விட்டவர் தன் இயல்பை அறிவார்கள்.

சேய் பெண்டு சுற்றம் மாய்கின்ற மட்டும். 50.

மக்கள், மனைவி, உறவோர் நாம் சாகும் வரை மட்டும்தான்.

சை என இகழ்வார் மெய்யர் உலகை 51.

ஞானியர் உலகவாழ்வைச் "சீ" என இகழ்வார்கள்.

சொப்பனம் போல்ஆம் இப்புவி ஆக்கம். 52.

இவ்வுலக வாழ்வு கனவு போன்றதாகும்.

சோர்வு படாது அருளார் சிவ ஆக்கம். 53.

அருள் நிறைந்த சிவனை நினைத்து வாழும் வாழ்வு கெடாது.

ஞலவல் போலும் மல உயிர் நீர்மை. 54.

மனம் சார்ந்த உயிரின் தன்மை மின்மினி போன்றதாகும்.

ஞாயிறுபோல்வார் நோய் அறும் அறிஞர். 55.

பிறவி நோய் அற்ற ஞானியர் சூரியன் போன்று ஒளி வீசுவர்.

ஞிமிர் ஒலி அந்தம் சமநிலை இன்றே. 56.

உயர்ந்த நாதம் அடங்குதல் சிவசமத்துவம் இல்லை.

ஞெகிழ்தல் மயங்கல் அகல முயல்க. 57.

தவத்தின் போது சோர்தலும் மயங்கலும் நீங்க முயல்க.

ஞேயத்து அகப்படும் மாய்வு அற்ற புத்தேள். 58.

இறவா இறைவன் அன்பிற்கு அகப்படுவான்.

ஞொள்கல் வெருளல் இன்று உள்குக நடுவே. 59.

இறைவனைச் சோம்பலும் அச்சமும் இன்றி மனத்துள் நினைக.

தன்னை அறிதல் தவத்தின் தவமே. 60.

தான் யார் என்ற அறிதலே தவத்தில் சிறந்த தவம் ஆகும்.

தாரகன் அறிதல் சூர் அறு சுகமே 61.

ஓங்கார தேவை அறிதலே அச்சமற்ற பேரின்பம்

திரிபுடி இகந்தோர் இருதிறம் பிரியார் 62.

காண்பான், காட்சி, காட்சிப் பொருள் மூன்றனையும் கடந்தவர் சீவான்மா பரமான்மா எனப் பிரிதலின்றி ஐக்கியமாவர்.

தீரா வழக்கே பாராத அளவும் 63.

இறைவனைத் தரிசிக்காதவரையில் வாதப்போர் தீராது.

துறவு நடையும் கறையாம் பொய்யில் 64.

துறவு ஒழுக்கம் பொய்யானதாயின் குற்றமுடையதாகும்.

தூங்கி எழல் போல் துஞ்சலும் உதிப்பும். 65.

தூங்கலும் விழித்தலும் போன்றன இறப்பும் பிறப்பும்.

தெய்வ விவேகம் மெய்யறிவார்கண். 66.

உண்மையை உணர்வார்க்குத் தெய்வம் உண்டு என்னும் மேலான அறிவுண்டாகும்.

தேடார்க்கு இல்லை வாடாத் தெய்வம். 67.

இறப்பிலாத் தெய்வம் தேடாதவர்க்கு இல்லை

தைவ கர்மத்தில் எய்தின் இழிவு இல்லை. 68.

தெய்வ காரியங்கள் செய்தால் தாழ்வு இல்லை.

தொண்டர் பணியரும் விண்தலம் வாழ்வார். 69.

தொண்டருக்குப் பணிசெய்வோரும் வானுலகம் சென்று வாழ்வார்கள்.

தோழன் மகன் போல் வாழ்தலும் நலனே. 70.

இறைவன்பால் தோழனாகவும் மகனாகவும் உறவு கொண்டு வாழ்தலும் நன்மையே.

நஞ்சு எனப்படுவது வஞ்சக நெஞ்சம். 71.

வஞ்சகமுள்ள மனமே நஞ்சு என்று கூறப்படுவது.

நாதர் தரிசனம் பாதக நாசம். 72.

கடவுள் தரிசனத்தால் குற்றங்கள் ஒழியும்.

நிறைவு அறிவாவது மறைவு அறக் காண்டல். 73.

முழுமையான அறிவாவது மலமறைப்பு நீங்கக் காண்பதாகும்.

நீக்கம் புகலார் சூக்கம் உணர்ந்தோர். 74.

நுட்பம் அறிந்தோர் கடவுளும் உயிரும் நீங்கியிருப்பதாகக் கூறமாட்டார்கள்.

நுகர்வன கண்டு நுகர்க பசித்தால். 75.

பசித்தால் மட்டும் உண்ணத்தக்க உணவைத் தேர்ந்து உண்க.

நூன்முறை அறியாப் பான்மை இழுக்காம். 76.

நூலின்தரம் அறியாத்தன்மை குற்றமாகும்.

நெருப்பைப் போலக் கருத்தனை நினைக. 77.

கடவுளை நெருப்பைப் போலக் கருதுக.

நேய வந்தனம் தூய வசியம் 78.

அன்பான வணக்கமே தூயவசப்படுத்தலாகும்.

நைதலும் மகிழ்தலும் வைய விகாரம். 79.

வருந்தலும் மகிழ்தலும் உலகத்தின் செயல்.

நொசிவு அறு வாழ்க்கை கசிவு உடையார்க்கே. 80.

ஈரநெஞ்சத்தார்க்கே துன்பமில்லா வாழ்க்கை அமையும்.

நோக்க நிலைக்கில் பூக்கொய் வினைஏன்? 81.

நினைப்பு அசையாது நிலைக்குமானால் மலர் கொய்து அருச்சனை செய்யும் செயல் ஏன்? வேண்டா.

பருவம் தெரிந்து பகர் பிறருக்கே. 82.

மற்றவர்க்குக் காலம் அறிந்து சொல்க.

பாடிப் பழிச்சல் கேடு அற்ற அன்பே. 83.

இறைவனைப் பாடித்துதித்தலே குறைவற்ற அன்பாகும்.

பிழை இலர் நல்கு கரிவும் அமுதமாம். 84.

குற்றமிலார் அளிக்கும் பிச்சைகூட அமுதம் போன்றதாகும்.

பீடை தருமே மூடர் உறவு. 85.

மூடருடைய உறவு துன்பம் தரும்.

புயல்போல் மறைக்கினும் வெயிலவன் போல்நில். 86.

மேகம் போல் மறைத்தாலும் சூரியன் போல் நிற்பாயாக.

பூரணம் ஆம்வரை தாரணை நீங்கேல் 87.

ஒரு பொருளில் மனம் நிலைபெறுவது முழுமையாகும் வரை அச்செயலைவிட்டு நீங்காதே.

பெருஞ்சுவை ஊண்இன்று அருந்துக சிறுக. 88.

விதவிதமாக பெரிய சுவை உணவுகளின்றிச் சாதாரண உணவைச் சிறிதளவு உண்க.

பேசா நாட்கள் பிறவா நாட்கள். 89.

மௌன நாட்களே பிறவாமைக்கு ஏதுவான நாட்கள்.

பைம்பொன் உலகாம் அம்பரம் அருளாம் 90.

பசிய பொன்னுலகாம் ஆகாசமே அருளாகும்.

பொன்மண் ஆசை மண்மண் ஆகும். 91.

பொன் ஆசையும், மண் ஆசையும் உள்ள உயிர் அழியும்.

போக்கும் வரவும் மோக்கத்தில் இல. 92.

முத்தியில் இறப்பும் பிறப்பும் என்பவை இல்லை.

மதிவலி பிறங்கின் வதிவலி அடங்கும். 93.

அறிவு வலிமையுற்று விளங்கினால் விதியின் வலிமை அடங்கும்.

மாளும் முன் உனை ஆள் பொருள் அறிதி. 94.

சாகும் முன்பே உன்னை ஆளும் இறைவனை அறிவாயாக.

மிடியோர் ஆவார் அடி பணியாதார். 95.

இறைவன் திருவடியை வணங்காதார் வறியர் ஆவார்கள்.

மீட்சிகாணில் காட்சி அற முயல். 96.

உயிரானது பற்றினின்றும் மீளுவதை உணரின் ஐம்புலக்காட்சியை நீக்க முயல்க.

முன்வினை ஒழிவில் தன்நிலை தெரியும். 97.

பழவினை ஒழியும்போது உயிர் தன் இயல்பை அறியும்.

மூலமும் விருத்தியும் ஞால மண் குடம் போல். 98.

காரணமும் (Cause  Effect) வளர்ச்சியும் பூமியின் மண்ணும் அதில் செய்யப்படும் குடமும் போல் என்க.

மெய்ப்பொருள்நேயம் கைக் கனியாகும். 99.

இறைவனிடம் வைத்த அன்பு கையில் வைத்துள்ள கனி போன்று பயன்படும்.

மேலாம் வீடு கால அதீதம். 100.

மேலான வீடுபேறு காலத்தைக் கடந்ததாகும்.

மை இருள் போலச் செய்கறை தன் உள். 101.

செய்யும் குற்றம் கரிய இருள் போல் தன் மனத்தை ஆக்கும்.

மொட்டையும் சடையும் கட்டாயம் இலை. 102.

துறவுக்கு மொட்டையோ அல்லது சடாமுடியோ கட்டாயம் இல்லை.

மோகம் என்பது ஆக்கை அறுதல் 103.

முத்தி என்பது சூக்கும உடம்பு ஒழிதலாகும்.

வரையறை நீப்பே புரைஅறு மாதனம். 104.

அளவுக்குட்பட்டவற்றை விடுதலே குற்றமற்ற பெரிய முத்திச் செல்வம்.

வானம் போலத் தியானம் செய்யே. 105.

மனத்தை வானம் போலத் தூய்மையுடனும் அசையாமலும் வைத்துக் கொண்டு தியானம் செய்வாயாக.

வினை எது புரியினும் அனகனை மறவேல். 106.

எந்தச் செயல் செய்தாலும் இறைவனை மறவாதே.

வீரை அறப் புகழ் ஆரியன் போல்நில் 107.

துயர் ஒழியத் திருப்புகழ் பாடியருளிய குருநாதர் அருணகிரியார்போல் பக்தியில் உறுதியாய் நில்.

வெல்லுக வெளியில் செல்லும் மனத்தை. 108.

வெளியில் செல்லும் மனத்தைச் செல்லவிடாமல் வெல்வாயாக.

வேட்கையும் வெறுப்பும் நீக்குதல் சத்தம். 109.

விருப்பும் வெறுப்பும் நீக்குதலே மனத்தூய்மையாகும்.

வைவச்சுதன் தொழில் மெய் அடியார்க்கு இல். 110.

உயிரைப் பறிக்கும் இயமன் தொழில் மேய் அடியாரிடம் செல்லாது.

ஞானவாக்கியம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.